# தமிழ்நாடு அரசு
# வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

பிரிவு : TNPSC Group VIIB & VIII தேர்வு

பாடம் : இந்து மதம்

பகுதி : <u>**மரணத்தின் பின் மனிதர் நிலை**</u>

**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி VIIB & VIII தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள்,ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்**
**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# மரணத்தின் பின் மனிதர் நிலை

- உலகில் பிறந்த எந்த உயிர்களும் இறப்பது உறுதி. "எப்போதாயினும் கூற்றுவன் வருவான்." 'இறப்பு' என்பது உறங்குவதை ஒக்குமெனவும், 'பிறப்பு' என்பது உறங்கி விழிப்பதைப் போன்றதொகும்.
- நாம் காணும் இப்பரு உடலினுள் ஒரு நுண்ணுடல் உள்ளது. அதனை சூக்குமசரீரம் என்பர். இதனை யாதனாசரீரம், ஆவி, நுண்ணுடல், உள்ளுடம்பு என்றும் கூறுவர்.
- ஸ்தூலசரீரத்தில் சூக்குமசரீரமும், சூக்குமசரீரத்தில் குணசரீரமும், குணசரீரத்தில் கஞ்சுகசரீரமும், கஞ்சுகசரீரத்தில் காரணசரீரமும் உள்ளன.
- ஸ்தூல உடலைவிட்டு உயிர் பிரிவதை மரணம் என்கிறோம். சூக்கும சரீரத்தில் சப்த, ஸ்பர்ச, ரூப, இரஸ, கந்தம் என்ற தன் மாத்திரை ஐந்தும், மனம், புத்தி, அகங்காரம் என்ற மூன்றும் உள்ளன.
- ஆன்மா செய்த புண்ணிய பாவங்களுக்குத் தக்கவாறு அருள் உலகங்களுக்கோ அல்லது இருள் உலகங்களுக்கோ செல்கின்றது.
- பாம்பு தோலாகிய சட்டையை விட்டு போவதைப் போலவும், பறவைகள் முட்டைத் தோட்டினை விட்டுச் செல்வதைப் போலவும் உயிர் ஸ்தூல உடம்பினை விட்டுப் பிரிகின்றது.
- மரணத்தின் பின் இருள் உலகம் சார்ந்தவர்களுக்கு எவ்வித விடுதலையும் இல்லை. விருப்பம் போல் போக்குவரவு செய்ய இயலாது.

- புண்ணியப் பகுதியில் சென்றவர்களுக்கு சுதந்திரம் உண்டு. எமலோகம், பிரம்மலோகம், விஷ்ணுலோகம், சிவலோகம் முதலிய இடங்களுக்குப் போய்வரவும் வழிபடவும் முடியும்.
- சூக்கும உடல்பற்றிச் சென்ற உயிர்கள் புண்ணிய பாவங்களுக்குத் தக்கபடி இன்ப துன்பங்களை நுகர்ந்த பின்னர் ஐசுவரியம் நிரம்பியவர்கள் மனையிலோ தரித்திரமிக்கோர் மனையிலோ வந்து பிறக்கும்.
- புண்ணிய உலகங்களும், இருள் உலகங்களும், அதற்குமேல் தேவலோகமும் அதற்கப்பால் பல உலகங்களும் உள்ளன என்பதும், மரணத்தின் பின் உயிர்கள் அங்குச் சென்று இன்ப துன்பங்களை அனுபவித்து மீண்டும் வந்து பிறக்கின்றன என்பது பரிபக்குவமுள்ள ஆன்மா மீண்டு வாரா நெறியாகிய, பரமுத்தியை அடைந்து இறைவனோடு ஒன்றி வாழும் என்பதும் விளங்குகின்றது.

-----****-----****-----